ஊடக அறிவித்தல் இல. - 84

# தேர்தல் ஆணைக்குழு

பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05

## வாக்கெண்ணும் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ள அரச அலுவலர்கள்/ அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்கள்/ அதிகாரம் பெற்ற முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்

2020.08.05 ஆந் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலின் வாக்கெண்ணும் பணியை 2020.08.06 ஆந் திகதி மு.ப 7:00 மணிக்கும் 8:00 மணிக்கும் அந்தந்த மாவட்டங்களில் ஆரம்பிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொவிட் 19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார வழிகாட்டல்களை உரிய முறையில் அமுல்படுத்துவதற்கு வாக்கெண்ணும் பணியாள்தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள், வாக்கெண்ணும் மண்டபங்களுக்கு அரசியற் கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்களினால் நியமிக்கப்பட்டுள்ள முகவர்கள் மற்றும் அனுமதி பெற்ற கண்காணிப்பு அமைப்புக்களின் கண்காணிப்பாளர்களை சுகாதாரப் பரிசோதனையொன்றுக்குக்குப் பின்னர் வாக்கெண்ணும் மண்டபங்கள் அமைந்துள்ள வளவுகளுக்குள் அனுமதிப்பதற்கு நேரிட்டுள்ளது. ஆதலால், வாக்கெண்ணும் பணி தாமதமடைவதைத் தவிர்ப்பதற்காக வாக்கெண்ணும் பணியாள்தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள், வாக்கெண்ணும் மண்டபங்களுக்கு அரசியற் கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்களினால் நியமிக்கப்பட்டுள்ள முகவர்கள் மற்றும் அனுமதி பெற்ற கண்காணிப்பாளர்கள், தாம் இணைக்கப்பட்டுள்ள வாக்கெண்ணும் வளவுக்கு 2020.08.06 ஆந் திகதி அந்தந்த தெரிவத்தாட்சி அலுவலரினால் அறிவிக்கப்பட்ட நேரத்திற்கு ஒரு மணித்தியாலயத்திற்கு முன்னர் வருகைதருமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை
இராஜகிரிய

2020.08.02

Zr/-